மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் பொன்னேரி

அ.வ.எண்.130/2010

04.04.2018

வாதி தரப்பு சாட்சி -1, 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -

நான் இந்த வழக்கில் 1-ம் வாதி என்றால் சரிதான். என்னுடைய தகப்பனார் பெயர் கோவிந்தரெட்டி. என் தாயார் பெயர் செல்லம்மாள். என்னுடைய தாய், தகப்பனார் தற்போது உயிருடன் இல்லை. என்னுடைய 8வது வயதில் என்னுடைய தாய், தகப்பனார் இறந்துவிட்டனர். அன்றைய தேதியிலிருந்து யார் எங்களை பராமரித்து வந்தார்கள் என்றால் என்னை எளாவூரில் உள்ள என்னுடைய சித்தி வளர்த்து வந்தார். என்னுடைய இரண்டு சகோதரிகளை என் தாய் மாமா ஜெயராமன் வளர்த்து வந்தார். இந்த வழக்கின் 2,3 வாதிகள் என் இளைய சகோதரிகள். இந்த வழக்கில் மற்ற வாதிகளுக்கும் சேர்த்துதான் நான் சாட்சியம் அளிக்கிறேன். 4-ம் வாதியான ரேனுகாவின் தாயார் பெயர் அபூர்வம், தகப்பனார் பெயர் அப்பா ரெட்டி. அந்த அபூர்வம்மாள் என்னுடைய தகப்பனார் உடன்பிறந்த தங்கை எனக்கு அத்தை. எனது தகப்பனார் உடன் பிறந்தவர்கள் என் தகப்பனாருடன் சேர்ந்து 5 ஆண் பிள்ளைகள் மற்றும் எனது அத்தை அபூர்வம்மாள். ரேனுகாவின் கணவர் பெயர் வரதன். 5 முதல் 7 வாதிகள் மேற்படி வரதனின் மகன் மற்றும் மகள்கள். என்னுடைய தாத்தா பெயர் முனுசாமி ரெட்டி. அவருடைய சொத்தை பொறுத்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய தாத்தாவிற்கு பிறந்த பிள்ளைகள் ரத்தினரெட்டி, கோவிந்தன், ஆறுமுகம், 1-ம் பிரதிவாதி ஜெயராமன் மற்றும் வரதன். 1 முதல் 3 வாதிகள் கோவிந்தனுடைய வாரிசுகள் என்றால் சரிதான். 4 முதல 7 வாதிகள் வரதனின் வாரிசுகள் என்றால் சரிதான். ஜெயராமன் தற்போது உயிருடன் உள்ளார். 2, 3 பிரதிவாதிகள் 1-ம் பிரதிவாதியின் தந்தை என்றால் சரிதான். 4 முதல 10 பிரதிவாதிகள் ஆறுமுகரெட்டியின் வாரிசுகள் என்றால் சரிதான். ரத்தின ரெட்டிக்கு 5 பிள்ளைகள் அதில் ஒருவர் இறந்துவிட்டார். ரத்தின ரெட்டியும் உயிருடன் இல்லை. ரத்தின ரெட்டியின் காலஞ்சென்ற மகனுக்கு ஒரு மகள் உள்ளார். ரத்தினரெட்டியின் வாரிசுகளை வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. 3ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை பத்தி 6-ல் ரத்தினரெட்டியின் வாரிசுகளை தரப்பினராக சேர்க்காததால் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், அதனை பொறுத்து ரத்தினரெட்டியின் வாரிசுகளை தரப்பினராக சேர்க்க


CTC of Lalitha

முயற்சிசெய்தேனா என்றால் இல்லை. வா.த.சா.ஆ. 2 ஆன அறிவிப்பை வழக்கறிஞர் மூலம் அனுப்பினோ என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் ரத்தினரெட்டியின் வாரிசுகள் பற்றி வம்சாவழி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சாதான். வழக்கறிஞர் அறிவிப்பில் ரத்தினரெட்டியின் வாரிசுகளை குறிப்பிட்டும், அவர்களை தரப்பினராக சேர்க்காததால் எடுத்த எடுப்பிலேயே என்னுடைய வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. முனுசாமி ரெட்டி இறந்தபின்னர் அவருடைய மகளான அபூர்வம்மாளுக்கு எப்போது திருமணம் நடந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. முனுசாமிரெட்டியின் மகன்கள் ஐவரும் தனித்தனியாக தான் குடித்தனம் நடத்தி வந்தார்கள் என்றால் சரிதான். அவர்கள் ஐவரும் தனித்தனி வீட்டில் தான் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்து ஆதியிலேயே 6 பாகமாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் இல்லை. 5 பாகமாக பிரிக்கப்பட்டது. அவர்களுக்குள் எப்போது பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது. ஏற்கனவே பாகம் பிரிக்கப்பட்ட சொத்தை பொறுத்து மீண்டும் பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்திருப்பது 1 முதல் 3 பிரதிவாதிகளை கஷ்டமும், நஷ்டமும் ஏற்படுத்தவே என்றால் சரியல்ல. அசல் வழக்கில் 3 முதல் 10 வரையிலான பிரதிவாதிகளை சேர்த்தபின்னர் 3ம் பிரதிவாதி ஆறுமுகரெட்டியின் வாரிசு என்று தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு திருமணம் செய்து வைத்தது என்னுடைய தாய்மாமாவும், சித்தியும் செய்து வைத்தார்கள். என்னுடைய தாய், தகப்பனார் இறப்பிற்கு பின்னர் என்னை 1ம் பிரதிவாதி ஜெயராமனும், 2-ம் வாதியை வரதனும், 3ம் வாதியை ஆறுமுகமும் வளர்த்து வந்து திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் சரியல்ல. 2-ம் வாதிக்கு முன்னரே எனக்கு திருமணம் நடைபெற்றது. என்னுடைய திருமணம் நடந்த தேதி எனக்கு ஞாபகமில்லை. ஆனால் அதற்கான ஆவணம் என்னிடம் உள்ளது. அதனை தாக்கல் செய்கின்றேன். என்னுடைய தங்கை 2-ம் வாதிக்கு 20.08.1975-ல் திருமணம் நடைபெற்றது என்றால் சரியல்ல. 2-ம் வாதியின் திருமணத்தை ஆறுமுக ரெட்டியும், வரதன் ரெட்டியும் சேர்ந்து செய்து வைத்தார்கள் என்றால் இல்லை. தாய்வழி பாட்டி தான் செய்து வைத்தார். எங்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை தான் 07.08.1975 தேதியில் வரதனும், ஆறுமுக ரெட்டியும் சேர்ந்து பதிவு செய்யப்படாத கிரைய பத்திரம் மூலம் 1-ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. அந்த கிரையபத்திரத்திற்கு

LTC 4
Lalitha

பின்னர் 1-ம் பிரதிவாதி அந்த சொத்தை பொறுத்து பட்டா மாற்றம் அவர் பெயருககு செய்துகொண்டார் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிககப்படும் ஆவணமானது ஆறுமுகரெட்டியும், வரத ரெட்டியும், ஜெயராம ரெட்டிககு எழுதிககொடுத்த கிரைய பத்திரம் என்றால் அவர்கள் எழுதிக்கொடுத்திருக்கலாம். அது தவறான ஆவணம். அது சட்டப்படி செல்லாது.

வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.



LTI of
Lalitha

[illegible]
படித்து காண்பிக்கப்பட்டு சரியென்று ஒப்புக்
கொண்டு என்முன் கையெழுத்து செய்தார்

4/4/18

மாவட்ட உரிமையியல் நீதிபதி
பொன்னேரி